JUDICIAL FORM NO.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW- - Pw-3 Witness
for Prosecution

| CC.No. | 261/2025 | Crime No. | 131/2023 | Station | Ammapet |
|---|---|---|---|---|---|

| Name | **Pw-3 ஜெயராமன்** | Village |
|---|---|---|
| Father's Name/Husband's Name | | Taluk |
| Age | | Calling |
| The Oath was administered to the witness by Tmt.K.Sivakami, Bench Clerk and was solemnly affirmed by the witness in accordance with the provisions of Oaths Act of 1969 on 15.04.2026 | | |

**எதிரி ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் பூனாச்சியில் குடியிருந்து கொண்டு, எலக்ட்ரிக்கல் கடை வைத்துள்ளேன். தேதி, மாதம் நினைவில்லை, சுமார் 2 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் பூனாச்சி IOB வங்கி அருகில் உள்ள டீக்கடையில் டீ சாப்பிட்டுக் கொண்டிருந்தபொழுது சத்தம் கேட்டது. வெளியே வந்து பார்த்தபொழுது ரோட்டை நடந்து சென்றவர் மீது பைக் மோதி விபத்து ஏற்பட்டு இருந்தது. நான் விபத்து நடைபெற்ற பிறகு தான் பார்த்தேன். அதனால் விபத்து எவ்வாறு ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது. பின்னர் அங்கிருந்தவர்களின் உதவியுடன் அடிபட்டவரை ஆம்புலன்ஸ் மூலமாக சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். வழக்கு தொடர்பாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளதால் சாட்சியை பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை மேற்கொள்ள நீதிமன்ற அனுமதியுடன் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–**

கடந்த 24.05.2019 ஆம் தேதியன்று காலை சுமார் 08:30 மணியளவில், பூனாச்சி IOB வங்கி அருகில் உள்ள முருகேசன் டீக்கடைக்கு வெளியில் நின்று பேசிக் கொண்டிருந்ததாகவும், அப்போது இந்த விபத்தில் இறந்துபோன முனியப்பன் என்பவர் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி ரோட்டை கடந்து நடந்து கடந்து வந்ததாகவும், அப்போது அதே ரோட்டில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வந்த பைக்கை ஆஜர் எதிரி வேகமாகவும், ஹாரன் அடிக்காமலும் ஓட்டி வந்து ரோட்டை நடந்து சென்றவர் மீது மோதி விபத்தை ஏற்படுத்தி விட்டதாகவும், அந்த விபத்தை நான் நேரில் பார்த்ததாகவும், அருகில் சென்று பார்த்தபொழுது முனியப்பனுக்கு வலது காலில் பலத்த அடிபட்டு இரத்தக்காயமும், இடது கையில் மொக்கைக்காயமும் மற்றும் தலையின் பின்புறம்

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.04.15 17:22:20 +0530

இரத்தக்காயமும் ஏற்பட்டிருந்ததாகவும், போலீஸ் விசாரணையில் கூறிவிட்டு தற்போது ஏதோ ஒரு காரணத்திற்காக எதிரிக்கு ஆதரவாகவும், அரசு தரப்பிற்கு எதிராகவும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

Signature of Witness

Taken down before me in open court
readover to the witness in the presence
of the accused pleads and admitted by
him/her to be correct

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.04.15 17:22:26 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani